தலைப்பு 228 – நீதிமன்ற நிர்வாகத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 228 – நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 ஜுன் 16 ஆந் திகதி கணக்கீட்டு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நீதிமன்ற நிர்வாகத் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதியல்லாத சொத்துக்களிற்குரிய SA-82 அட்டவணையில் கட்டிட்ங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இலலங்களில் 2024 ஆண்டில் செலுத்திய ரூபா 34,295,863 பெறுமதி 2024 ஆண்டில் நடைமுறை வேலை - 9160 இன் ஆரம்ப மீதியினுள் காண்பிக்கப்பட்டிருந்தது.	SA-**82** அட்டவணையில் அலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்ல மீதிகளில் **2023** ஆண்டின் இறுதி மீதி மற்றும் **2024** ஆண்டின் ஆரம்ப மீதக்கிடையே, வித்தியாசத்திற்கு காரணமாக அமைவது குறியீட்டிலக்கம் **9160** நடைமுறை வேலையின் கீழ் உள்ளடங்கிள் செயற்திட்ட நிர்மாணங்கள் நிறைவடைந்துள்ளதால்லாகும், அப்பெறுமதியை நடைமுறை வேலை பெறுமதியிலிருந்து அகற்றி, குறியீட்டிலக்கம் **9151** கீழ் அலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லமாக சிகாஸ் முறைமையின் மூலம் கணக்கீடு செய்வதனாலாகும், வேலை பூர்த்தி செய்யப்பட்ட	ஆண்டினுள் செய்யப்பட்ட செலவுகள் ஆண்டிற்குரியதாக கணக்கீடு செய்ய வேண்டும்.

		செயற்திட்டம் நடைமுறை வேலை கணக்கிலிருந்து அகற்றி சொத்தாக கணக்கீடு செய்யும் போது சிகாஸ் முறைமையினுள் சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கு இடம்பெறும் செம்மையாக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.	

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டினுள் திணைக்கள மீண்டெழும் 03 செலவு விடயங்களில் ரூபா. **1,844,770** நிதிஏற்பாடு மற்றும் 05 மூலதன செலவு விடயங்களில் ரூபா. **16,243,815** ஆன நிதிஏற்பாடும் எஞ்சியிருந்ததுடன், அது 16 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை பரந்திருந்தது.	அத்தியவசிய செலவுகளை மாத்திரம் மேற்கொண்டமை தேவைப்பாடு ஏற்படாமை, கொள்வனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்தியமை, சில செயற்திட்டங்கை நடைமுறைப்படுத் முடியாதமை ஆகிய காரணங்களின் மீது நிதிஏற்பாடு எஞ்சியதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	உரிய ஆய்வுடன் மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	**228-1-1-1-1503** அரச நிறுவன செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கியிருந்த ரூபா. **880,000** ஆன மொத்த குறைநிரப்பு மதிப்பீட்டு நிதிஏற்பாடும் மீளாய்வாண்டு இறுதியில் எஞ்சியிருந்தது.	ஆளணியை ஆட்சேர்க்க திட்டமிட்ட போதும், ஆட்சேர்ப்பு தாமதித்தமை மற்றும் அதிகரித்த வாழ்கை படியை செலுத்த தேசிய பாதீட்டு திணைக்களம் நிதிஏற்பாடு வழங்கியதால் மேலதிக நிதிஏற்பாடு செலவாகவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.	தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு சரியாக மேலதிக நிதிஏற்பாட்டை கோர வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
11 செலவு விடயங்களிற்கு உரியதாக 2024 திசெம்பர் 31	நீதிமன்றங்களில் அன்றாட நடவடிக்கைகளை தொடர்ந்து	வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாட்டின்

திகதிக்கு எஞ்சிய நிதிஏற்பாட்டு அளவு ரூபா **48,143,640** ஆன போனதும், 2024 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா **119,403,596** ஆன பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதிஏற்பாட்டை விஞ்சி இணைந்திருந்த பொறுப்பு பெறுமதி ரூபா **71,259,955** ஆனது.	நடாத்திச் செல்லுவதற்காக கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டதாக மற்றும் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களும், பாதீட்டு சுற்றறிக்கை மூலம் செலவினம் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	மீது கடப்பாடுகளை முகாமை செய்து கொள்ள வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**		
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i) நிதிப்பிரமாணம் **104**	**2022** மற்றும் **2023** ஆண்டுகளி விபத்திற்கு உள்ளான 02 வாகனங்களினதும், மீளாய்வாண்டு விபத்திற்குள்ளான 09 வாகனங்களினதும், விசாரணை சபை இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணம் **104** பிரகாரம் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இறுதி அறிக்கையை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) நிதிப்பிரமாணம் **396**	**2024** திசெம்பர் **31** திகதிக்கு உயர் நீதிமன்ற 10 வலையங்களிற்கு உரிய 23 நீதிமன்ற வங்கிக் கணக்குகளில் 06 மாதங்களை விஞ்சிய ரூபா **1,831,753** ஆன காசோலைகள் தொடர்பாக	தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் 06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் **30/2016** கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை	திணைக்களத்திற்குரிய 69 வாகனங்களிற்கான எரிபொருள் பாவனை பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	நீதிபதிகளிற்கு வழங்கியுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களில் வருடாந்த எரிபொருள் பரீட்சிப்பை உயர் நீதிமன்றம் மூலம் மேற்கொள்வது மிகவும் நடைமுறை சாத்தியமாகையால், அதற்கு தேவையான நடவடிக்கைகளை **30/2016** இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் விரைவில் மேற்கொண்டு அதற்குரிய அறிக்கை ஒன்றை அமைச்சிற்கு அனுப்புமாறு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதி வரை பிரதான அலுவலக வைப்புக் கணக்கில் காணப்படும் மீதி ரூபா **339,071,224** ஆனதுடன், அதன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 02 ஆண்டுகளை விஞ்சிய மற்றும் 05 ஆண்டுகளிலும் குறைந்த கால எல்லையிலிருந்து நிலவும் வைப்பு மீதி ரூபா **240,234,146** தொகையும், 05 ஆண்டுகளை விட அதிக காலமாக நிலவிவரும் மீதி ரூபா **42,597,090** உம், காணப்பட்டன.	விடுவிக்க முடியமான அனைத்து நிறுத்த பணம் விடுவிக்கவும் அவ்வாறு இல்லையெனின் நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் வருமானத்திற்க செலவு வைக்கவும் தேவையான செயற்பாடுகள் எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	விடுவிக்க முடியுமான வைப்புக்கள் உரியவாறு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேணடும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டு ஆரம்ப திகதியிக்கு உயர் நீதிமன்றத்தில் தீர்க்கப்படவிருந்த பல்வேறு வகையான வழக்குகள் **16,393** ஆனதுடன், ஆண்டினுள் **17,086** வழங்குகள் கோவை செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆண்டினுள் தீர்க்கப்படவிருந்த வழக்குகள் **33,479** ஆன மொத்த அளவில் **16,295** தீர்க்கப்பட்டு இருந்த போதும், திசெம்பர் **31** திகதி வரை **17,184** வழக்குகள் தீர்க்கப்படவிருந்தன. மீளாய்வாண்டில் வழங்கு தீர்க்கும் முன்னேற்றம் 48 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	சட்ட தாமதத்தை தடுக்க சட்ட மறுசீரமைப்பு, நீதிமன்றங்களை நிறுவுதல், நீதிமன்ற உத்தியோகத்தர் மற்றும் உதவி ஆளணியை ஆட்சேர்த்தல் மற்றும் நீதியை நிலைநாட்டும் பொறிமுறைக்கு உதவி வழங்கும் நிறுவனங்களை வலுவூட்டல் எனும் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	சட்ட தாமதங்களை தடுப்பதற்கு வசதிகளை வழங்கி வழக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் தீர்ப்பதற்கு இருந்த மொத்த தொழிலாளர் பிரச்சினைகளின் அளவு **5974** ஆனதுடன், ஆண்டினுள் **2413** பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதித் திகதியில் தீர்க்கப்படவிருந்த பிரச்சினைகளின் அளவு **3561** ஆனது. மீளாய்வாண்டில் தொழிலாளர் பிரச்சினை தீர்ப்பது 40 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	இதற்காக ஆளணி பற்றாக்குறை, பௌதீக வளங்கள் மற்றும் உட்பட்டமைப்பு பற்றாக்குறை காரணமாகவுள்ளதாகவும், அதனை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	தொழிலாளர் பிரச்சினையை தீர்ப்பதனை வினைத்திறனாக மற்றும் விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அமைச்சின் பாதீட்டு நிதிஏற்பாட்டின் மீது ஆரம்பித்திருந்த புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாணம் மற்றும் விரிவாக்கல், உத்தியோகபூர்வ நிர்மாணம் மற்றும் காப்பங்க நிர்மாண 32 செயற்திட்டங்கள் சீரற்ற பொருளாத நிலைமை, மூலப்பொருள் விலை அதிகரித்தல், விலை வேறுபாட்டு எல்லையை விஞ்சுதல் ஆகிய காரணங்களினால் ஒப்பந்ததாரருடன் பரஸ்பர இணக்கப்பாட்டின் மீது நிறுத்தப்பட்டிருந்தன. இந்த 32 செயற்திட்டங்களின் மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 4,498,222,955 ஆவதுடன், நிறைவு செய்யும் சந்தர்ப்பத்தில் திரண்ட கிரயம் ரூபா **346,177,202** ஆனது**.** இந்த செயற்திட்டங்களை மேற்கொள்வதன் பௌதீக முன்னேற்றம் 1 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான மட்டத்தில் காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்படும் பரஸ்பர இணக்கப்பாட்டின் மீது நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்கு இடையே நிறுத்தும் சந்தர்ப்பம் வரை பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்தை விஞ்சிய செயற்திட்டங்களை இந்த ஆண்டினுள் மீண்டும் விலை கோரி ஆரம்பிக்க தேவைான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. ஏனைய செயற்திட்டங்களை எதிர்வரும் பாதீடுகளின் போது நிதிஏற்பாடு கிடைக்கும் விதத்தில் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிர்மாணங்களை திட்டமிட்டவாறு நிறைவு செய்து அதன் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவக்கை எடுக்க வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கண்டி அஸ்கிரிய லமாகார மாவத்தையில் அமைந்துள்ள உயர் நீதிமன்ற நீதிபதி உத்தியோகபூர்வ இல்லம் நகர மத்தியில் மிகவும் உயர்ந்த வணக பெறுமதியுடன் கூடிய 40 பர்சஸ் நிலத்தில் அமைந்துள்ளதுடன், இந்த உத்தியோகபூர்வ இல்லம் 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை	**2024** ஆண்டில் திருத்தத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டுள்ளதுடன், திருத்த நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் நீதிபதிக் ஒப்படைப்பதாக குறிப்பிட்டிருந்தது.	திருத்த நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்து பயன்பாட்டிற்காக சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

	எந்தவித பணிகளிற்கு பயன்படுத்தாது 05 ஆண்டு காலமாக விளைவற்று நிலவியது.		
(ஆ)	மீளாய்வாண்டு இறுதியில் தங்கல்ல, பலவிடிய, ஹம்பந்தொடை, ஹோமாகம, எம்பிலிபிடிய, குருனாகல ஆகிய உயர் நீதிமன்றங்கள் அமைந்துள்ள 4.86 ஏக்கரான மொத்த நில அளவையும் அமைச்சிற்கு சுவீகரித்திருக்கவில்லை.	பலபிடிய நீதிமன்ற வளவு நிலத்தை தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடனே நிலத்தை அமைச்சிற்கு கையொப்ப முன்மொழிவை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், பலபிடிய நீதிமன்ற வளவு அமைந்துள்ள நிலத்தை நிலஅளவை அதிகாரிக்கு நிலஅளவை கோரிக்கைக்காக அனுப்பியுள்ளதாகவும், ஹம்பந்தொடை மற்றும் ஹோமாகம நீதிமன்ற வளவு தொடர்பாக குறித்த பிரதேச செயலாளர்களிற்கு அறிவித்துள்ளதாகவும், எம்பிலிபிடிய காணிக்காக மஹவெலி அதிகார சபையிடம் கோருவதற்கும் குருனாகல நீதிமன்றத்தை நிர்மாணிக்க காணி பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் காணியை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அமைச்சினால் 2000 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலஎல்லையினுள் புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாணம் மற்றும் விரிவாக்கல், உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிப்பது போன்ற செயற்திட்டங்களிற்காக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் 44 ஏக்கர் அளவான 25 காணிகளை சுவீகரிக்க ஆரம்பித்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் வகனிக்கத்தக்க காலமொன்று கடந்துள்ள போதும், அந்த காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்து இருக்கவில்லை.	இழப்பீடு வழங்கியதன் பின்னர் சட்டரீதியாக சுவீகரிப்பு செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	விரைவில் அக் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமானம் **880** பிரகாரம் நீதிமன்ற சேவையில் ஈடுபட்டுள்ள பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் உரியவாறு பிணை வைக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டில் 20 உயர் நீதிமன்றங்களில் 107 உத்தியோகத்தர்கள் ரூபா **2,471,500** ஆன தொதையை பிணையாக வைத்திருக்கவில்லை.	நிதிப்பிரமானம் **880** பிரகாரம் மற்றும் நீதிமன்ற அமைச்சின் சுற்றறிக்கை **01/2011** பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தலின் கீழ் பிணை வைப்புச் செய்யாத உத்தியோகத்தர்களை இனங்கண்டு விரைவில் பிணை தொகையை வைப்பதற்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு பிணை வைத்த உத்தியோகத்தர்களின் பிணை பிரதிகளை எனக்கு அனுப்புமாறும், பிணை வைக்காத உத்தியோகத்தர்களின் பெயர்களை விரைவில் எனக்கு அனுப்புமாறும் எனது இலக்கம் MOJ/E16/Common மற்றும் **2025.06.02** திகதிய கடிதம் மூலம் அனைத்து நீதிபதிகளும் அறிவுருத்தப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் பிணை வைக்காத உத்தியோகத்தர்களை இனங்கண்டு இது தொடர்பாக உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் **109(1)** மற்றும் **(2), 2024** திசெம்பர் **31** திகதிக்கு திணைக்களத்தினுள் ஒவ்வொறு ஆண்டுகளிலும் இடம்பெற்றுள்ள விபத்து நட்ட சேதங்கள் 44 சம்பவங்களிற்கு உரியதாக தொடர்ந்தும் அறிவிட வேண்டியுள்ள சேதங்கள் மற்றும் நட்டங்களின் பெறுமதி ரூபா **3,439,925** ஆகும்.	08 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் **104** பிரகாரம் புலனாய்வு செயற்பாடுகளை மேற்கொண்டு அதன் அறிக்கைகள் தற்போது கிடைத்துள்ளதுடன், சேத நட்ட பதிவேட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், ஏனைய வாகன விபத்துக்கள் பல ஆண்டுகள் பழையவை ஆகையால்,	நிதிப்பிரமாணம் பிரகாரம் சேதம் மற்றும் நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		பிரச்சினைகளை தீர்க்க காணப்படும் நடைமுறை பிரச்சினைகளை தீர்த்து அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சிலாபம் மாவட்ட நீதவான் நீதிபதி உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணத்திற்காக பெறுகைகள் பெறுமதி ரூபா **28,805,130** ஆவதுடன், செயற்திட்டத்தை **2020** ஆண்டில் ஆரம்பித்து **2024** ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்கு வழங்கியிருந்த ரூபா **8,283,039** முற்பணத் தொகையில் **2025** சனவரி மாதம் வரை ரூபா **1,844,562** தொகை அறவிட வேண்டியிருந்தது. முற்பண பிணையின் செல்லுபடியாகும் காலம் **2024** ஏப்ரல் **19** ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையும் அதனை நீடித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த முற்பண பிணைமுறியை காலாவதியாக முன்னர் கால நீடிக்க அல்லது அறவிட வங்கிக்கு அறவித்து அனுப்பப்பட்டுள்ளது. அற்கிடையே செயற்திட்டத்தை இடைநடுவே நிறுத்திவிட்டு ஒப்பந்ததாரர் விலகிச் சென்றுள்ளதால், அதனை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு வங்கிக்கு அறிவித்த போதும் அதற்காக வங்கியினால் சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதா அறிவித்து அனுப்பியுள்ளது. அதன் பிரகாரம் வங்கிக்கு பிணைமுறியை அறவிட்டு வழங்குவது தொடர்பாக இறுதி நினைவூட்டல் விநியோகிக்க எதிர்பார்ப்பதுடன், அதனை அறவிட்டு வழங்கவில்லை எனில் சட்ட பிரிவின் மூலம் முன்நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை பெற்று முன்நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.	வெளித் தரப்பினரிற்கு வழங்கியுள்ள தொகையை விரைவில் அறவிட வேண்டும்.
(ஆ)	**2024** ஆண்டு திசெம்பர் **31** திகதிக்கு ஓய்வுபெற்ற 66 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா **8,257,938** உம், 30 மரணித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா **4,454,961** உம், 71 பணித் தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து	இந்த கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்ற வலையங்களிற்கு அறிவுரை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.	கடன் மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ரூபா **10,161,904** உம் மற்றும் 80 சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா **12,123,730** உமாக கூட்டுத்தொகை ரூபா **34,998,533** ஆன கடன் மீதி அறவிட வேண்டியதாக இருந்தது.		
(இ)	தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் **7.2.5** பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு ஒருமுறை வாகன கடன் பெற்றுக் கொள்ள முடியுமாவதுடன், அவ்வாறு பெற்றுக் கொள்ளும் போது முன்னர் பெற்றுக் கொண்ட கடன் தொகையை முற்றாக செலுத்தி முடிவுறுத்தியிருக்க வேண்டும். எனினும் கொழும்பு உயர் நீதிமன்ற வலையத்தில் சேவை புரியும் பணித்தடை செய்திருந்த பதிவாளர் ஒருவருக்கு மோடார் வாகன கடன் மற்றும் சைக்கில் கடன் ஆகிய இரண்டு வகையையும் வழங்கியுள்ளதால் அவரிடமிருந்து ரூபா **107,000** ஆன மோடார் வாகன கடன் மற்றும் ரூபா **3,800** ஆன சைக்கில் கடன் அறவிட வேண்டியதாக இருந்ததுடன், அந்த கடன் மீதிகள் 10 ஆண்டு காலத்திற்கு அதிக காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.	அ.நி.சு. **01/2024**(I) பிரகாரம் அந்த கடன் மீதியை பதிவழிக்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தின் மூலம் வழங்கும் அறிவுரை பிரகாரம் இந்த கடன் மீதியை தீர்த்துக் கொள்ள எதிர்காலத்தில் செயற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	தாபன விதிக்கோவையின் பிரகாரம் கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	**2024** திசெம்பர் **31** திகதிக்கு அரச உத்தியோகத்தர் முற்பண ''பீ'' கணக்கு இணக்கக்கூற்றில் தனிநபர் கடன் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கிடையில் ரூபா **13,146,719** ஆன வித்தியாசம் காணப்பட்டது.	நீதிமன்ற **26** வலையங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முற்பாணம் ''பீ'' கணக்கை தயாரிப்பதாகவும், சில கணக்கு வலையங்களில் இடம்பெற்றிருந்த கணக்கீடு தவறுகளை 2024 ஆண்டில் இனங்காண முடியுமான போதும், அந்த தவறுகள் இடம்பெற்றிருப்பது குறித்த நீதிமன்ற வலையத்தின் கணக்கில் மாத்திரமா இல்லையெனில் அமைச்சின் கட்டுப்பாட்டுக் கணக்கிலா தவறுடன் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக திட்டவட்டமான	கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை மற்றும் தனிநபர் மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பின் கூட்டுத் தொகைக்கிடையேயான வித்தியாசத்தை தீர்க்க வேண்டும்.

		தகவல்களை இனங்காண முடியாததால், அந்த தவறுகளை சரிசெய்து கொண்டு அமைச்சின் கட்டுப்பாட்டு கணக்கில் மற்றும் தனிநபர் கடன் மீதி வகைப்படுத்தும் பொழிப்பை சமனாக்கி பேணிக் கொள்ள முடியாதுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	
(உ)	**2024** திசெம்பர் **31** திகதிக்கு 13 உயர் நீதிமன்றங்களில் தண்டப்பண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 52 வழக்குகளிற்குரியதாக ரூபா **3,883,600** ஆன மொத் தண்டப்பணத்தை அறவிட வேண்டியதாக காணப்பட்டது.	ஒவ்வொறு உயர் நீதிமன்றங்களிற்கும் உரியதாக தற்போது அறவிட்டுள்ள தண்டப்பணம் தொடர்பான விபரம் மேலும் அறவிட வேண்டியுள்ள தண்டப்பணம் தொடரபான விபரம் குறிப்பிடப்பட்டிருந்தது.	தண்டப்பணத்தை உரிய காலஎல்லையினுள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	**2017** முதல் **2022** வரை 05 ஆண்டுகளில் 03 நிர்மாண செயற்திட்டங்களிற்கு உரியதாக ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கியிருந்த வாடகை மற்றும் வேலை முற்பணத்திலிருந்து ரூபா **67,371,118** ஆன மீதி தோடர்ந்தும் அறவிடப்படாது காணப்பட்டது.	சிலாப நீதிமன்ற இரட்டை உத்தியோகபூர்வ நிர்மாண செயற்திட்டம் மற்றும் வலபனை நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாண செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த முற்பணம் மற்றும் முற்பண பிணைமுறி மூலம் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும், கெகிராவ நீதிமன்ற கட்டிட நிர்மாண செயற்திட்டத்திற்காக போலியான பிணைமுறை ஒன்றை சமர்ப்பித்துள்ளதால் முற்பணத்தை அறவிடுவது தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்று வருவதாகவும், குறிப்பிட்டிருந்தது.	வெளித்தரப்பினரிற்கு வழங்கியிருந்த முற்பணத்தை விரைவில் அறவிட வேண்டும்.

5. **மனித வள முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டு இறுதி வரை திணைக்கள அங்கீகார மொத்த ஆளணி **4746** ஆகவும் மற்றும் உள்ளவாறான ஆளணி **3867** ஆனதில் **879** உத்தியோகத்தர்களின் வெற்றிட அளவொன்று காணப்பட்டது.	வெற்றிடங்களை நிரப்ப தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்	வெற்றிடங்களை விரைவில் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		குழுவிற்கு மற்றும் பொது நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	
(ஆ)	திசெம்பர் **31** திகதிக்கு அலுவலக ஊழியர்கள், நீதிமன்ற பாதுகாவளர், அழைப்பாணை விநியோகித்தர் மற்றும் எஸ்கிசி செயற்படுத்துனர் ஆகிய பதவிகளிற்குரிய அங்கீகார ஆளணியினர் முறையே **2894, 525, 819** மற்றும் உண்மையான எண்ணிக்கை முறையே **2461, 370, 590** வீதம் அந்த பதவிகளில் அதிக வெற்றிட அளவுகள் காணப்பட்டதுடன், அந்த அளவுகள் முறையே **433, 155, 229** உமாக இருந்தன.	வெற்றிடங்களை நிரப்ப தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிற்கு மற்றும் பொது நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை விரைவில் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	திசெம்பர் **31** திகதிக்கு 08 உயர் நீதிமன்றங்களில் 08 கணக்காளர்கள் பதிற்கடமையில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன், அதில் 03 உத்தியோகத்தர்கள் 2023 ஆண்டிலிருந்தும், 05 உத்தியோகத்தர்கள் 2024 ஆண்டிலிருந்தும் பதிற்கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.	கணக்காளர்களின் தேவைப்பாட்டை அறிவித்து பொது நிர்வாக அமைச்சிற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதம் அனுப்பியுள்ள போதும், இது வரை இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறாயினும், வலைய உயர் தீதிமன்றங்களில் நிதி செயற்பாடுகளை ஒழுங்காக நடாத்திச் செல்ல வெற்றிடமாகவுள்ள கணக்காளர் பதவிகளிற்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்களை அமைர்த்த நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை விரைவில் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.